ஓமந்தையில் 22க்கும் அதிகமான ராணுவம்பலி

விலை ரூபா 4-50

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 83 திதிகை 23 ஒவ்வாக் 20 இதழ்: 85

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 6-5-1991

18 சடலங்கள் மீட்பு

[வவுனியா]

ஓமந்தைப் பகுதியைநோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நேற்று நடைபெற்ற கடும்மோதலில் 22 இராணுவத்தினருக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதுடன், பலர் படுகாயமடைந்தனர்.

விடுதலைப்புலிகளினால் 18 இராணுவத்தினரின் சடலங்களும் பெருமளவு ஆயுதங்களும்

(4-ம் பக்கம் பார்க்க)

மீட்கப்பட்ட ஆயுதங்கள்

(வவுனியா)

ஓமந்தை கோழிக்குளம்பகுதியில் நேற்று இராணுவத்துக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெற்ற கடும் மோதலில் இராணுவத்திடமிருந்து விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

ஜி. பி. எம் ஜி.-1, மினி மினி துப்பாக்கி-2, எப் என். சி.-2, 60மிலி மோட்டார்-1, ஜி. பி. எம். ஜி. பரல்-1, ஜி.

(4-ம் பக்கம் பார்க்க)

அமெரிக்காவில் சர்வதேச தமிழீழ ஆய்வு மாநாடு

[கலிபோர்னியா]

'சர்வதேச தமிழீழ ஆய்வு மாநாடொன்று' யூலைமாதம் 20-ம், 21 ம் திகதிகளில் அமெரிக்காவில் கலிபோர்னியா பல்கலைகழகத்தில் நடைபெறவுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

இலங்கைக்கு வழங்கப்படும் ராணுவ உதவிகளை நிறுத்துமாறு

19 பிரிட்டிஷ் எம்.பி.க்கள் மகஜர்!

(நமது வெளிநாட்டு செய்திச் சேவை)

இலங்கைக்கு இராணுவ உதவி வழங்குவதை உடனடியாகநிறுத்துமாறு பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்கள் 19 பேர் மகஜர் ஒன்றை பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஜோன் மேஜரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

இது குறித்து அண்மையில் பாராளுமன்றத்தில் விவாதம் ஒன்றும் நடைபெற்றுள்ளது. இவ் விவாதத்தின்போது பல கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் 19 எம்பிக்கள் கையெழுத்திட்டு பிரதமரிடம் சமர்ப்பித்தனர்.

இம் மகஜரில், இலங்கைக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இராணுவ உதவி

(4-ம் பக்கம் பார்க்க)

கிழக்கில் 11 தமிழ் மாணவர் கடத்தப்பட்டுகொலை

(மட்டக்களப்பு)

ரியூசனுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த 11 தமிழ் மாணவர்கள் கடத்தப்பட்டுக் கொலைசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 25ம் திகதி அம்பாறை மாவட்டத்தில் உள்ள தம்பிலுவில் பகுதியில் நடைபெற்ற இச்சம்பவத்தில் 6 மாணவர்களும், 5 மாணவிகளும் கொலைசெய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி மரணவர்கள் யாரால் கடத்தப்பட்டார்கள் என்றோ அல்லது கடத்தப்பட்டதற்கான காரணமோ இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

வனபரிபாலன பயிற்சிவகுப்பு சிங்களத்தில் தமிழ் அலுவலர்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

நுவரெலியாவில் இயங்கும் வனபரிபாலன பயிற்சிக்கல்லூரியில் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புகள் தனிச்சிங்களத்தில் நடைபெறுகிறது.

இதன் காரணமாக மேற்படி பயிற்சி வகுப்புக்குத் தெரிவு செய்யப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த வனபரிபாலன தமிழ் அலுவலர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

தனிச்சிங்களத்தில் நடைபெறும் விரிவுரைகள் விளங்கிக் கொள்ளமுடியாத நிலையில் தமிழ் அலுவலர்கள் இருக்கி

(4ம் பக்கம் பார்க்க)

மன்னாரில் மிதிவெடியினால் மக்கள் பாதிப்பு

(பூநகரி)

மன்னார் மாவட்டத்தில் இராணுவம் வந்து சென்ற பகுதிகளில் இராணுவம்

[4-ம் பக்கம் பார்க்க]

பருத்தித்துறை கடற்படை கப்பல் தகர்ப்பில் 6படையினர்பலி 8பேர்காயம்

- அரசு அறிவிப்பு

(கொழும்பு)

பருத்தித்துறை கடற்பகுதியில் தரித்துநின்ற கடற்படையினரின் கப்பல் மீது கடந்த 4ம் திகதி விடுதலைப் புலிகள் வெடிமருந்து நிரப்பிய படகு ஒன்றின் மூலம் தாக்கியதில் 6 கடற்படையினர் கொல்லப்பட்டதாகவும், 8 கடற்படையினர் காயமடைந்துள்ளதாகவும் அரசு நேற்று அறிவித்தது.

(க)

ஒத்திவைக்கப்பட்ட ஜி. சீ. ஈ. விசேட பரீட்சை விரைவில் நடத்தப்படும்

(கொழும்பு)

வட-கிழக்கு மாகாணங்களில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் க.பொ.த. [உயர்தர] விசேட பரீட்சை இன்று திங்கட்கிழமை முதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இப்பரீட்சையின் மிகுதிப் பாடங்களை விரைவில் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகிறது.

பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல இவ்வாறு தெரிவித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

வடக்கு கிழக்கில் விமானத் தாக்குதலை நிறுத்துமாறு அவுஸ்திரேலியாவிடம் கோரிக்கை

(கண்டி)

இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதியில் இடம்பெறும் விமானத்தாக்குதலை உடனடியாக நிறுத்துமாறு 'அவுஸ்திரேலிய தமிழர் சங்கம்' கோரியுள்ளது.

இது தொடர்பாக இச்சங்கம் வெளியிட்ட மகஜர் ஒன்று அவுஸ்திரேலிய பிரதமர் திரு. பொப் ஹொக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கில் விமானத

(4-ம் பக்கம் பார்க்க)

பரீட்சார்த்திகள் மனோநிலை பாதிக்கப்பட்டிருக்கிறது

[யாழ்ப்பாணம்]

கல்விப் பொதுத் தராதர விசேட பரீட்சை ஒத்திவைத்துள்ளபடியால் பரீட்சார்த்திகளின் மனோநிலை பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் விரை

(4-ம் பக்கம் பார்க்க)

பலாலி ஷெல்கள் சுழிபுரத்தில் வீழ்ந்தன

(யாழ்ப்பாணம்)

பலாலியிலிருந்து நேற்றுமுன் தினமிரவு ஏவப்பட்ட ஆட்லறி ஷெல்கள் சுழிபுரம், வட்டுக்கோட்டை பகுதியில் வீழ்ந்து வெடித்தன.

சுழிபுரம், தொல்புரம் பகுதியில் சுமார் 7-45 மணியளவில் 3 ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததில் இருவர் காயமடைந்ததாக கூறப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

தீவுப்பகுதி வீடுகளில் பகலும் இரவும் திருட்டு

(வேலணை)

தீவுப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்களது வீடுகளில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டிவருகின்றனராம்.

(4-ம் பக்கம் பார்க்க)

வரதராஜப்பெருமாள் பீஹாருக்கு மாற்றம்

(புதுடில்லி)

வடக்கு-கிழக்கு மாகாண முன்னாள் முதல்வர் திரு. வரதராஜப்பெருமாள் அவசர அவசரமாக மத்திய பிரதேசத்தி

(4-ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

பழைய புத்தகசாலை இடமாற்றம்

பழைய புத்தகங்கள், கொப்பிகள், பேப்பர், சஞ்சிகைகள், போத்தல், பித்தளை, செப்பு, கோழித்தீன் பைகள் வாங்கப்படும் விற்கப்படும் புதிய விலாசம்: சேனாதிராசா 108, மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம். [சி-4676]

மலிவு 15 வரை மட்டும்

மீரா வெளியீடுகள் 140/- வுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/- ரூபாவுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம். திருக்கணிதம் சாவகச்சேரி, யாழ்ப்பாணத்தில் சகலபுத்தகசாலைகளிலும். (சி-4695)

தவறிவிட்டது

திருநாவுக்கரசு - மோகனதாஸ் அவருடைய 683470368 V இலக்கத்தையுடைய அடையாள அட்டை சாவகச்சேரி தபால் நிலையத்திற்கு முன்னால் தவறிவிட்டது. அதை கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் விலாசத்திற்கு தயவு செய்து ஒப்படைக்கவும். விக்கினேஸ்வரன் ஜுவலர்ஸ், கண்டி வீதி சாவகச்சேரி, சன்மானம் வழங்கப்படும் (சி-4706)

மரம் வீழ்ந்து பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

வீட்டு வளவில் நின்ற தென்னை மரம் வீட்டிற்கு மேல் வீழ்ந்ததில் குடும்பப் பெண்ணொருவர் படுகாயமுற்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நவாலி தெற்கு மானிப்பாயில் வசிக்கும் திருமதி பாக்கியலக்சுமி அந்தோனிப்பிள்ளை (40 வயது) என்பவரின் வீட்டின் மேலே தென்னை மரம் முறிந்து வீழ்ந்ததால் அவர் காயமுற்றார். இதனால் வீட்டுக்கூரை முழுவதும் சேதமுற்றது. [56]

யாழ். சுகாதார பிராந்திய வைத்தியசாலைகளில் மருந்துத் தட்டுப்பாடு

[பண்டத்தரிப்பு]

யாழ். சுகாதார பிராந்தியத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளுக்கு இவ்வருட 2ம் காலாண்டுக்கான மருந்து வகைகள் இதுவரை விநியோகிக்கப்படாததினால் இப்பகுதி வைத்தியசாலைகளில் பலத்த மருந்துத் தட்டுப்பாடு நிலவுகிறது.

மாவட்ட மருந்துக் களஞ்சியத்துக்கு இதுவரை 2ம் காலாண்டுக்கான மருந்துவகைகள் கொழும்பிலிருந்து அனுப்பிவைக்கப்படவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது. (72)

உ. அ. அதிபர் பிரிவு மென்பந்துப் போட்டி

(உடுவில்)

உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் யாழ்ப்பாண குடாநாட்டில் அண்மையில் நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் மென்பந்துப் போட்டியில் சிறந்த பந்து வீச்சாளருக்கான பரிசினை சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த திரு. ரி. நரேஸ் பெற்றுக்கொண்டார்.

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இப்போட்டியில் யாழ் குடாநாட்டை சேர்ந்த ஒன்பது உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் பங்குபற்றின.

யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டுத்துறை பொறுப்பதிகாரி திரு கி. அண்ணாதுரை தலைமையில் போட்டிகள் நடைபெற்றன.

இப்போட்டிகளின் முடிவில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவினர் முதலாம் இடத்தையும் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவினர் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

போட்டிகளில் சிறந்த வீரர்களுக்கான பரிசினை நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த திரு. கோபிசங்கர் பெற்றுக்கொண்டார். சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான பரிசையும் அதேபிரிவைச் சேர்ந்த திரு. சுந்தரலிங்கம் பெற்றுக்கொண்டார்.

மேற்படி போட்டிகளை விளையாட்டுத்துறை அதிகாரி திரு. ரோகன் ஒழுங்குபடுத்தி நடத்தினார். (109)

"சமய வாழ்வினால் பிறப்பின் இலட்சியத்தை அடையலாம்"

(பருத்தித்துறை)

மனிதன் சமய வாழ்க்கை வாழ்வதன் மூலமே பிறப்பின் இலட்சியத்தையடைந்து இன்பத்தையடை முடியும். மக்கள் மத்தியிலே சமய உண்மைகளைப் பரப்புவதிலும், சமய வாழ்க்கை பற்றிய விளக்கங்களை ஏற்படுத்துவதிலும் சமய நிறுவனங்கள் முக்கிய பங்கெடுக்க வேண்டும்,

இவ்வாறு இளைப்பாறிய கல்வியதிகாரி, திரு பி. சச்சியானந்தம், புலோலி கோத்தணி அதிபர், திரு வீ. எஸ் ஏகாம்பரநாதன் ஆகியோர் இணைந்து எழுதிய "சிவ நெறிச்சிந்தனைகள்" நூல் பாராட்டு விழாவிலே உரையாற்றிய வடமராட்சி கோட்டக்கல்வி அலுவலக பிரதம கல்வியதிகாரி திரு. எஸ். செல்லத்துரை குறிப்பிட்டார்.

பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலய மண்டபத்திலே இலங்கைச் சைவமன்றத் தலைவர் பேராசிரியர் வீ கே. கணேசலிங்கம் தலைமையில் விழா நடைபெற்றது.

இளைப்பாறிய ஆசிரியர் திரு எஸ். கிருஷ்ணசிங்கம் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார், நூல் ஆய்வுரையை செல்வி ஏ. கனகரத்தினம் மேற்கொண்டார். இளைப்பாறிய பொலிஸ் அதிபர் திரு. ஜே. வயிரவிப்பிள்ளையிடமிருந்து "சிவ நெறிச் சிந்தனைகள்" முதலாவது பிரதியை யதார்த்த கலை இலக்கிய வட்டத் தலைவர் வைத்தியகலாநிதி எம். கே. முருகானந்தன் பெற்றுக்கொண்டார்.

பருத்தித்துறை ஹாப்லிக் கல்லூரி அதிபர் திரு. எஸ். பி. பாலசிங்கம், பருத்தித்துறை பிரதேச சபை புலோலி பொதுசன நூலகர் திரு. எஸ் திருச்செல்வம் ஆகியோரும் சிறப்புரையாற்றினார்கள். சிவஸ்ரீ வ. வே. நவரத்தினக்குருக்கள் நன்றி கூறினார். (52)

'தமிழரின் தாகம்' வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதனின் "தமிழரின் தாகம்" என்னும் கவிதை நூல் வெளியீட்டு விழா நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இன்று 6-ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முறைசாராக் கல்விப் பிரிவு அதிகாரி ச. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

தகிழீழ விடுதலைப் புலிகளின் வடமராட்சி இணைப்பாளர் திரு. சூசை சிறப்புரையாற்றுவார்.

ஆய்வுரையை கி. நடராசா, எஸ். சி. எஸ் சிதம்பரநாதன், க. சிதம்பரப்பிள்ளை ஆகியோர் நிகழ்த்த, முதற் பிரதியை சு. சண்முகசுந்தரம், எம். ராஜகோபால் ஆகியோரும் பெறுகின்றனர். (152)

வீதிக்கு மாவீரர் பெயர்

(உடுவில்)

உடுவில் – கந்தரோடை வீதிக்கு வீரமரணமடைந்த விடுதலைப் புலிப் போராளி சிந்து (சூரியகுமார்)வின் ஞாபகார்த்தமாக சிந்துவீதி என பெயரிடப்பட்டுள்ளது.

உடுவில் கிராமிய நீதிமன்ற தலைவர் திரு எஸ். பாலசிங்கம்கொடியேற்றிவைக்க சிந்துவின் தாயார் வீதிக்கான பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்துவைத்தார்.

வீரமரணமடைந்த மற்றொரு போராளியான திரு. விக்கினேஸ்வரராசா (விக்கி) யின் தாயாரினால் திரு. சிந்துவின் உருவப்படம் திரைநீக்கம் செய்யப்பட்டது. [109]

ஓய்வுபெற்றார்

(உடுவில்)

பிரதேச சபை உடுவில் உப அலுவலக பிரதம இலிகிதர் திரு. இ. பத்மநாதன் அண்மையில் தமது சேவையில் இருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

சண்டிலிப்பாய் உ. அ. அதிபர்

(பண்டத்தரிப்பு)

இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த திரு. எஸ். கனகரத்தினம் இம்மாதம் தொடக்கம் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த பல வருடங்களாக பதில் உதவி அரசாங்க அதிபர் ஒருவரே இக்கு கடமையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. (72)

நீர் இறைக்கும் இயந்திரம் அன்பளிப்பு

(உடுவில்)

தெற்கு தன்னேணி கலைநகர் ஐக்கிய நாணய சிக்கன சேமிப்பு கடனுதவு சங்கத்தினருக்கு வடபிரதேச ஐக்கிய நாணய சிக்கன சங்கங்களின் சமாசத்தினரால் நீரிறைக்கும் இயந்திரம் ஒன்று வழங்கப்படவுள்ளது.

மேற்படி சங்க உறுப்பினர்களுக்கு நீரிறைப்பதற்கு வசதியாக குறைந்த கட்டணத்தில் இந்நீரிறைக்கும் இயந்திரம் வாடகைக்கு வழங்கப்படவிருப்பதாக மேற்படி சங்கச் செயலாளர் திரு. வி. ரி கதிர்காமநாதன் தெரிவித்தார். (109)

சிவநெறிக்கழக நூல் வெளியீடு

(கிளிநொச்சி)

சமயசமூகத் தொண்டாற்றி அமரத்துவம் எய்திய கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம விதாபகர்களில் ஒருவரான த நல்லதம்பி நினைவாக கிளிநொச்சி திருநெறிக்கழகத்தால் கைவெழுத்து நூல் ஒன்று வெளியிட்டு வைக்கப்பட்டது.

திருநெறிக்கழக செயலாளர் ஆசிரியை திருமதி சோ. செல்வராணி இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார். மகாதேவா ஆச்சிரம நிர்வாகி தவத்திரு கணேசானந்த மகாதேவ சுவாமிகள் தலைமையில் இவ்வைபவம் இடம்பெற்றது. (83)

லொறிகள் திரும்பின பொருட்கள் சேதம்

(பூநகரி)

வவுனியாவில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கை காரணமாக வடபகுதியிலிருந்து விவசாயப் பொருட்களை ஏற்றிச் சென்ற லொறிகள் பாதுகாப்பை முன்னிட்டு திரும்பி கிளிநொச்சி, பூநகரி போன்ற பகுதியில் தரித்துநிற்கின்றன.

இதனால் ஏற்றிச் செல்லப்பட்டபொருட்கள் பழுதடைந்தநிலையில் காணப்படுகின்றன.

இதேவேளை லொறி உரிமையாளர்களுக்கு திரும்பி வந்ததனால் ரூபா 15,000 க்கு மேற்பட்ட மேலதிக செலவு ஏற்பட்டுள்ளதாம். (23)

உரம், மண்ணெண்ணை விதை வழங்கப்பட்டது

[பண்டத்தரிப்பு]

மாதகல் விவுலானந்தர் ஐக்கிய நாணய சங்கம் உபஉணவு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சங்க உறுப்பினர்கள் 24 பேருக்கு விதைகள், உரம், மண்ணெண்ணை ஆகியன வற்றை அண்மையில் வழங்கியுள்ளது. செயர் நிறுவனத்தின் கடனுதவித் திட்டத்தின் முதல் கட்டமாக இவை வழங்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் அடுத்த கட்ட உரம், மண்ணெண்ணை என்பன வழங்கப்படவுள்ளதாகவும் சங்கத்தின் செயலாளர் திரு. க. சிவரதினம் தெரிவித்தார். (72)

நோயாளர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புற்று நோயாளர்கள், காசநோயாளர்கள், தொழு நோயாளர்கள் ஆகியோருக்கான ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்கான கொடுப்பனவுகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரை இந்த கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளாதவர்கள் மேற்படி உதவி அரசாங்க அதிபர் பிரிவு சமூக சேவை உத்தியோகத்தர் திரு அ. அமிர்தலிங்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (72)

இன்று பாலர் பாடசாலை திறப்பு விழா

(பருத்தித்துறை)

இன்பருட்டி பாலர் பாடசாலைத் திறப்புவிழாவும், கல்விநிலைய முதலாம் ஆண்டு விழாவும் இன்று 6-ம் திகதி பருத்தித்துறைபிரதேசசபைசேட ஆணையாளர் திரு. எம். தம்பிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. நமுநலேஸ் புலிக்கொடியை ஏற்றி விழாவை ஆரம்பித்துவைப்பார். யாழ் உள்ளூராட்சி உதவிஆணையாளர் திரு. எஸ் டிவகலால பாடசாலையைத் திறந்துவைப்பார். பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு செல்வஸ்ரீனிவாசன் விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். யாழ் உள்ளூராட்சித் திணைக்கள சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் திரு கே. இராசையா, பருத்தித்துறை பிரதேச சபை நிர்வாக அதிகாரி திரு. பெ. கனகசபாபதி ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்கின்றனர். (52)

அகதிமுகாமில் கண்நோயினால் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சன்மார்க்க பாடசாலை அகதிமுகாமில் சிறுவர்கள் பெரியோருக்கு ஏற்பட்ட கண் நோயினால் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனைத்தடுக்கு முகமாக சுகாதார வசதியினை ஏற்படுத்திக் கொடுப்பதில் சுகாதாரப்பிரிவும், செஞ்சிலுவைச் சங்கத்தினரும் ஈடுபட்டுள்ளனர்.

115 குடும்பங்கள் கொண்ட இவ்அகதி முகாமில் 900 பேர் வரையில் உள்ளனர்.

பிராந்தியப் பொறுப்பதிகாரி

[கொழும்புத்துறை]

யாழ். செயலக ஆட்பதிவுத் திணைக்களத்தின் யாழ் பிராந்தியப் பொறுப்பதிகாரியாக திரு. க. பீதாம்பரம் அண்மையில் நியமனம்பெற்றுள்ளார்.

முன்பு பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய திரு. எஸ் கார்த்திகேசு சுயவிருப்பத்தின் பேரில் இளைப்பாறியுள்ளார். (154)

மகளிர்மன்ற நிர்வாகிகள்

[உடுவில்]

உடுவில் கலைமதி சனசமூக நிலைய மகளிர் மன்ற வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது, புது வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: த. இராசரட்ணம், உபதலைவர்: ச. ஜெயச்சந்திரிகா, இணைச்செயலாளர்கள்: கி. மங்களகோபி, நா. மல்லிகாதேவி பொருளாளர்: க. குமுதினி, கணக்குப் பரிசோதகர்; செ. தவமணி, விளையாட்டுத்துறை: தி ஜெயேஸ்வரி, கலைகலாசாரப் பிரிவு. தே. யூஜின் விநிஸ்ரா. [109]

குளிர்சாதனப் பெட்டியில் தங்கக் கட்டிகள்

கடத்தல் முறியடிப்பு

(கொழும்பு)

சுமார் 50 லட்சம் ரூபா பெறுமதியான 75 தங்க பிஸ்கட்டுகளை கட்டுநாயக்கா விமான நிலைய சுங்கப்பகுதியினர் கைப்பற்றியுள்ளனர்

சிங்கப்பூரிலிருந்து குளிர்சாதனப் பெட்டி ஒன்று இலங்கையிலுள்ள உறவினருக்கு அன்பளிப்பாக அனுப்பப்பட்டதாகவும் ஆனால் வழமையை விட எடை கூடுதலாக இருந்ததை அவதானித்த சுங்கப்பகுதியினர் குளிர்சாதனப் பெட்டியை சோதனையிட்ட போதே தங்க பிஸ்கட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகிறது. (க)

சிறுதானிய விதைகள்

(உடுவில்)

சித்தங்கேணி கலைநகர் ஐக்கிய நாணய சிக்கனசேமிப்புச் சங்கத்தினர் தமது சங்க உறுப்பினர்களுக்கு உபஉணவு பயிர்ச்செய்கையை ஆரம்பிக்க உதவும் முகமாக எள்ளு பயறு, குரக்கன், டௌபி போன்ற சிறுதானிய விதைகளை வழங்கிவருகின்றனர்.

இச் சங்கத்தின் தலைவர் திரு. வே. கந்தசாமி இதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளார். (109)

தீவுப்பகுதி மக்களுக்கு யாழ்.நகரில் நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதி அகதிகளுக்கு ஊர்காவற்றுறை, வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் யாழ் நகரில் இரவு பகலாக நிவாரணப் பொருட்களை வழங்கி வருகின்றார்கள்.

வேலணை ப. நோ. கூ. சங்கம் ஆறுயிரம் நிவாரண அட்டைகளில் மூவாயிரத்துக்கு மேல் நிவாரணம் வழங்கி விட்டதாகவும் வேலணை ப. நோ. கூ. சங்கங்கள் கணிசமான அளவு நிவாரணங்கள் வழங்கியுள்ளதாகவும் அந்தந்தப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொறுப்பானவர்கள் தெரிவித்தனர்.

வேலணை ப. நோ. கூ. சங்கத்திற்கு யாழ். மானிப்பாய் வீதியில் கிளைகள் அமைக்கப்பட்டு சரவணை, வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டதீவு மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது,

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கத்திற்கு சிறும்பியடி ஒழுங்கையில் கிளை அமைக்கப்பட்டு கரம்பொன், நாரந்தனை தம்பாட்டி மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (152)

கொழும்பில் விளையாட்டுப் போட்டி

(கொழும்பு)

சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகள் கலந்து கொள்ளும் விளையாட்டுப் போட்டி எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் கொழும்பில் நடைபெறவிருக்கின்றது.

சார்க் நாடுகள் கலந்து கொள்ளும் போட்டி கொழும்பில் நடத்தப்படுவது இதுவே முதல்முறையாகும். (க)

மானவர்கள் இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் கல்வி நிலையங்களைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவ, மாணவிகள் யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இரத்ததானம் வழங்க முன்வந்த போது 10 பேரிடம் மட்டுமே பெறமுடிந்தது. ஏனையோரை பின்னர் வந்து வழங்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.

தற்போது இரத்த வங்கிக்கு ஜெனரேட்டர் வசதியின்மையால் போதிய இரத்தத்தைச் சேமித்துப் பாதுகாக்கமுடியாத நிலையிலேயே இரத்தம் வழங்க முன்வருபவர்களைத் திருப்பி அனுப்பவேண்டியநிலை இரத்த வங்கியினருக்கு ஏற்பட்டுள்ளது. (56)

இடம்பெயர்ந்த புங்குடுதீவு மக்களுக்கு இலவச உணவுப்பொருள்

(புங்குடுதீவு)

இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து தீவுப்பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள புங்குடுதீவு மக்களுக்கு, புங்குடுதீவு-நயினாதீவு பல நோ. கூ. சங்கம் யாழ். சிறும்பியடியில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள மணியம் கட்டிடத்தில் அவர்களுக்கான இலவச உலர் உணவுப் பொருட்களை விநியோகித்து வருகிறது.

புங்குதீவு - நயினாதீவு பல. நோ. கூ. சங்கத்திலுள்ள கிளைகள் ஒன்று தொடக்கம் ஒன்பது வரைக்கும் சிறும்பியடி பகுதியில் இயங்கும் கட்டிடத்தில் உலர் உணவுப் பொருட்களை வழங்கி வருகிறது

மேலும் பத்து தொடக்கம் பதினாறு வரையுள்ள கிளைகளுக்கு யாழ்ப்பாணம் மானிப்பாய்வீதியில் அமைக்கப்பட்டுள்ள இரு இடங்களிலும் உணவு பொருட்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இடம்பெயர்ந்துள்ள தீவுப்பகுதி மக்களின் நலனை கருதி இரவு பகலாக புங்-நயி பல. நோ. கூ. ச. ஊழியர்களும், கிராமசேவையாளர்களும் சேவையாற்றிவருகின்றார்கள்.

ஓய்வு நாளான நேற்றும் தொடர்ந்து மக்களுக்கு நிவராணங்கள் வழங்கப்பட்டன. (101)

ஆசிரியர் தொலைக்கல்வி பாடநெறி விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் தொலைக்கல்விப் பாடநெறிகளில் பயிலுவதற்காக ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தல் 1991-ஆம் ஆண்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தமிழ்மொழி மூலம் பயில்வதற்காகச் சேவையிலிருக்கும் பட்டதாரியல்லாத. பயிற்றப்படாத நிரந்தர ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

ஆரம்ப பாடநெறி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய கற்கை நெறிகள் ஜூன்மாதம் முதல் ஆரம்பமாகவுள்ளன.

விண்ணப்பங்களை பணிப்பாளர், தொலைக் கல்வித் துறை, கல்வி அமைச்சு, இசுறுபாய பத்தரமுல்லை. என்ற விலாசத்திற்கு அனுப்புமாறு கோரப்பட்டுள்ளார்கள்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகியமாவட்டங்களுக்கு வர்த்தமானப் பத்திரிகை பிந்தி வந்த காரணமாக விண்ணப்பங்களை இம்மாதத்திற்கு முன் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது. (153)

இருவர் பலி 30 பேர் காயம்

[இஸ்லாமபாத்]

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்திலுள்ள நஜீபுல்லா கிராமத்தில் பஸ்-வான் என்பன நேருக்குநேர் மோதிக்கொண்டதில் இருவர் பலியானார்கள். 30 பேர் படுகாயமடைந்தனர். (க)

கிணற்றில் விழுந்து காயம்

[யாழ்ப்பாணம்]

கிணற்றில் துலாவினால் தண்ணீர் அள்ளிய மாணவி ஒருவர் துலாக்கயிறு அறுந்ததால் கிணற்றிற்குள் தவறிவீழ்ந்து பலத்த காயங்களுக்குள்ளாகி யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எழுவைதீவு 5ம் வட்டாரத்தைச் சேர்ந்த லெற்றிஸியா திருச்செல்வம் [13 வயது) என்பவரே கிணற்றில் வீழ்ந்து காயப்பட்டவராவர். (56)

தொண்டர் ஆசிரியர் தகவல் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசினர் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக இருந்து பயிலுனர் ஆசிரியர்களாக தென்னிலங்கையில் தெரிவானோரில் பல ஊழல்கள் இடம் பெற்றதாக அறிய வருகின்றது.

இதைக் கருத்திற்கொண்டு கல்வி அமைச்சு நாட்டிலுள்ள திணைக்களங்களுக்கு தொண்டர் ஆசிரியர்கள் பற்றி பல தகவல்களைச் சேகரிக்கும்படி சுற்றறிக்கை மூலம் கேட்டுள்ளது.

தொண்டர் ஆசிரியரின் இரகசிய அறிக்கை பெறல், தற்காலிகதகைமைகள்பெற்று நியமனம் பெற்றிருத்தால் அந்த தற்காலிக தகைமையைப் பகிரங்கப்படுத்தி குறைபாடுகள் எதிர்ப்புகள் பற்றி ஆராய்தல் போன்ற நடவடிக்கைகளை எடுக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

அத்தோடு இந்தக்குறைபாடுகளை விசாரிப்பதற்கு மாகாணக்கல்விப் பணிப்பாளரினால் நியமிக்கப்பட்ட சிரேஷ்ட பதவி நிலை உத்தியோகத்தர் கொண்ட விசாரணைக் குழு தொண்டர் ஆசிரியர்கள் பற்றி விசாரணை செய்யவிருக்கிறது. (152)

தமிழ்நாடு தேர்தல் களம்

★ பாதுகாப்பு ஏற்பாடு

தமிழ்நாடு தேர்தலில் சட்டமும் ஒழுங்கும் இடம்பெறுவதற்கான சகல பாதுகாப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக தமிழக தலைமைச் செயலர் திரு. அந்தோனி நேற்று கோவையில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

★ 101 பெண்கள் போட்டி

தமிழ்நாட்டில் முன்னர் எப்பொதுமில்லாவதாக தேர்தலில் 101 பெண்கள் போட்டியிடுகின்றனர். அ. தி. மு. க. சார்பில் 27 பெண்களும், தி. மு. க. சார்பில் 7 பெண்களும், காங்கிரஸ் சார்பில் 6 பெண்களும், போட்டியிடுகின்றனர். ஜனதாதள் சார்பில் 2 பெண்களும், பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் 2 பெண்களும் போட்டியிடுகின்றனர். அறவகுறிச்சித் தொகுதியில் மட்டும் 9 பெண்கள் போட்டியிடுகிறார்கள். இத்தேர்தலில் சுமேட்டையாக 59 பெண்கள் போட்டியிடுகின்றார்கள். கடந்த தேர்தலில் வெற்றிபெற்ற 8 பெண்களில் 6 பேர் மீண்டும் போட்டியிடுகிறார்கள்.

★ ஒரே மேடையில் பலர்

தமிழ்நாட்டில் தேர்தலில் சுமுகமாக நடக்கவேண்டும் என்பதை வலியுறுத்தும் நிலையில் பல இடங்களில் ஒரே தொகுதியில் போட்டியிடும் பல வேட்பாளர்கள் ஒரே மேடையில் தோன்றி உரையாற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திருச்சியில் நேற்றுமுன்தினம் ஒரு தொகுதியில் போட்டியிடும் பல வேட்பாளர் ஒரே மேடையில் தோன்றினார்கள். தொண்டர் நிறுவனங்கள் இதற்கான ஏற்பாட்டை செய்துள்ளன. மன்னார்குடியிலும் எதிர்வரும் 8-ம் திகதி ஒரே மேடையில் பல வேட்பாளர்களை தோன்றச்செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதேபோன்று பல்வேறு தொகுதிகளிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

★ சர்வகட்சி மாநாடு

தேர்தலை அமைதியாகவும் சீராகவும் நடத்த முழு ஒத்துழைப்பு வழங்குவதென திருச்சியில் நடந்த சர்வகட்சி மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. இந்த மாநாட்டில் சகல கட்சி உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

★ வன்முறை தவிர்க்க ஏற்பாடு

இராமநாதபுரம் மாவட்டத்தில் தேர்தல் வாக்களிப்பின்போது வன்முறை ஏற்பட வாய்ப்புள்ளதாக 123 இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த இடங்களுக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. வாக்களிப்பு தினத்தில் வாக்களிப்பு நிலையங்களில் மேலதிக பொலிஸாரை கடமைக்கு அமர்த்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

★ இரவு நேரத்தில்

அதிக வெப்பநிலைகாரணமாக மாலையிலும், இரவிலுமே தேர்தல் பிரசார வேலைகள் நடைபெறுகின்றன. கட்சித்தலைவர்கள் இரவு நேரத்தில் தான் வந்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள். சில இடங்களில் அதிகாலைவரை தேர்தல் பிரசாரம் நடைபெறுகிறது.

★ நேரில் சந்திப்பு

இம்முறை தேர்தல் சுவரொட்டிகள், பிரசாரங்கள் கடந்த தேர்தலிலும் பார்க்க குறைவாகவே காணப்படுகிறது. பல இடங்களில் கடந்த தேர்தலில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் அகற்றப்படாமல் அப்படியே காணப்படுகிறது. வேட்பாளர்கள் கட்சி தலைவர்கள் மக்களை நேரில் சந்திப்பதில் தான் அதிக கவனம் செலுத்துகின்றார்கள்.

★ சூறுவளி பிரசாரம்

தேர்தலுக்கு இன்னும் 3 வாரங்கள் இருப்பதால் கடைசிவாரம்தான் பிரசாரம் சூடுபிடிக்கும் என அவதானிகள் தெரிவிக்கின்றனர். கடைசி வாரத்தில் தலைவர்கள் சூறுவளி பிரசாரங்களை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இராசி பலன்

06-05-1991

திங்கட்கிழமை

ஸப்தமி பி. ப. 2–29 வரை, திருவோணம் பி. ப. 5–15வரை இராகுகாலம் காலை 7–26 முதல் 8–56 வரை, எமகண்டம் பகல் 11–56 முதல் 1–26 வரை, அமிர்த சித்தயோகம்.

மேடம்: வீட்டில் சுபகாரியம், பெரியோர் ஆசி, பாராட்டு.

இடபம்: வாக்குவன்மை, பணியாள் தொல்லை, மனப்போராட்டம்.

மிதுனம்: தொழில் சிக்கல், குடும்பஅமைதிகுன்றல், பணப்பிரச்சனை.

கடகம்: தொழில் சிறப்பு, புதிய முதலீடு, இனசன உதவி

சிங்கம்: தயாளசிந்தை, கல்வியால் பாராட்டு, பயணம்.

கன்னி: மனவேதனை, கடன் சுமை, தொழில் நஷ்டம்.

துலாம்: பதட்டமானநிலை, தொழில் பிணக்கு, விண்பகை

விருச்சிகம்: வாழ்க்கைத் சுகம், சகோதரஉதவி தொழில் லாபம்.

தனுசு: பகைவர் தொல்லை, ஏமாற்றம், குடும்பப்பிரிவு

மகரம்: புதுப்பொருள் சேர்க்கை, அதிகாரிகள் பாராட்டு, காரியவெற்றி

கும்பம், கடமை தவறுதல், மனச்சுமை, பெண்துன்பம்.

மீனம்: போட்டி மனப்பான்மை.

ஜோஸ்யர்

புலிகளை அங்கீகரிக்கப்பட்ட அமைப்பாக கருத வேண்டும்

(சென்னை)

- ஏ. பி. வெங்கடேஸ்வரன்

'தமிழீழ விடுதலைப்புலிகளை, பலஸ்தீனிய விடுதலை அமைப்பு ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் போல் அங்கீகரிக்கப்பட்ட ஓர் அமைப்பாகக்கருதவேண்டும்.'

முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலர் திரு ஏ.பி.வெங்கடேஸ்வரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்:

அவர் இது குறித்து மேலும் தெரிவித்திருப்பதாவது:

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான அபிலாஷைகளை இலங்கை அதிகாரிகள் நசுக்குவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் இவ்வேளை விடுதலைப்புலிகளை அங்கீகரிக்கப்பட்ட ஓர் இயக்கமாக ஏற்றுக்கொள்வதில் நாம் அதிதீவிரக்கவனம் செலுத்த வேண்டும்.

தமிழர் கைது

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் கலவன் கேணி என்னும் இடத்தில் நேற்று முன்தினம் இராணுவத்தினரும் ரெலோ குழுவினரும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது தமிழர் ஒருவரைக் கைதுசெய்து முகாமுக்கு கொண்டுசென்றுள்ளனர்.

கிருஷ்ணகுமார் என்னும் தமிழரே மேற்படி கும்பலால் கைது செய்யப்பட்டவராவார். [த-வி]

அமெரிக்க அதிபர் புஷ் ஆஸ்பத்திரியில்

(வாஷிங்டன்)

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்த சமயம் சுகவீனமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தற்போது இவர்சுகமடைந்து வருவதாகவும் மிக விரைவில் தனது வழமையான அலுவல்களில் ஈடுபடமுடியும் என்றும் ஆஸ்பத்திரி தட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [க]

பிரட்மன் வீரக்கோன் நாடு திரும்பினார்

(கொழும்பு)

சீனாவுக்கு அவசர பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்த ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் கடந்தவாரம் நாடு திரும்பினார்

இவர் இராணுவ உதவி கோரியே சீனா சென்று பிரதமர் திரு. பெங்கை சந்தித்த தாகவும் அவதாவிடம் தெரிவித்துள்ளனர்.

எனினும் இவரது விஜயம் குறித்து அரசோ, சீன அரசோ எவ்விதத் தகவலையும் வெளியிடவில்லை. (சி)

வரதராஜப்பெருமாள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்து பீஹார் மாநிலத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

அண்மையில் இவர் மத்திய பிரதேசத்தில் தங்கியிருந்த மாளிகை ஒன்றை நோக்கி பெருமளவு உள்ளூர் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தவாறு சென்று மாளிகையை முற்றுகையிட்டனராம்.

இதைஅடுத்து அங்கிருந்த படையினர் இவர்களை தாக்கி விரட்டியடித்தனர். இச்சம்பவத்தையடுத்து திரு. பெருமாள் பீகார் மாநிலத்திற்கு பாதுகாப்புடன் இடமாற்றப் பட்டுள்ளார். (சி)

தீவுப்பகுதி

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பகலிலும், இரவிலும் சன நடமாட்டம் இல்லாத நேரங்களில் வீடுகளை உடைத்து, பெறுமதியான பொருட்களைத் திருடுகின்றனராம் எனக் கூறப்படுகிறது. (75)

பலாலி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதே வேளை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு சமீபமாக வீழ்ந்து 2 ஷெல்கள் வெடித்ததில் பல உடைமைகள் முறிந்து வீழ்ந்ததாக தெரியவருகிறது. [கி]

வனபரிபாலன

1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரூர்கள்.

தமிழில் தமக்கு விரிவுரைகளை நடத்துமாறு மேலிடத்திடம் தமிழ் பயிற்சி அலுவலர்கள் கேட்டும் இது பற்றி இதுவரையுங் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (153)

ஒத்திவைக்கப்பட்ட

1-ம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சை நடைபெறும் புதிய திகதிகள் பற்றிய விபரம் பரீட்சார்த்திகளுக்கு பொதுசன தொடர்புசாதனங்கள்மூலம் அறிவிக்கப்படும்என்றும் பரீட்சார்த்திகள் குறுகிய காலத்தில் மிகுதிப் பாடங்களை எடுப்பதற்கு தம்மை தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் பரீட்சை ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். [க]

அமெரிக்காவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதுதொடர்பான ஏற்பாடுகளை 'கலிபோர்னியா பல்கலைக்கழகம்' மேற்கொண்டு வருகிறது.

இம் மாநாட்டில் ஆறிக்கை சமர்ப்பிக்க விரும்புவோர் அல்லது நேரடியாக மாநாட்டில் கலந்து கொள்ள விரும்புவோர் யூன்15-ம்திகதிக்கு முன் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கலிபோர்னியா பல்கலைக்கழகத்தினர் கேட்டுள்ளனர். [கி]

பரீட்சார்த்தி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாக பரீட்சையை நடாத்துங்கள்''

இவ்வாறு யாழ். கல்விப் பணிப்பாளர் இ சுந்தரலிங்கம் கொழும்புக்கு அனுப்பி வைத்த தகவலில் கேட்டுள்ளார்.

வடக்கு கிழக்கில் இப் பரீட்சை ஒத்திவைத்துள்ள படியால் பரீட்சார்த்திகளும், பெற்றோர்களும் அதிக கவலை அடைந்துள்ளதாகத் தெரிவருகிறது. (152)

திருமலை ராணுவத்தினர் மீது புலிகள் கடும் தாக்குதல்

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் முகாமை முற்றுகையிடச் சென்ற இராணுவத்தினர் மீது நேற்று முன்தினம் காலை 10-00 மணியளவில் விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல்களை நடாத்தி யுள்ளனர்.

கடவானைப் பகுதியில் நடைபெற்ற மோதலில் இராணுவத்தினருக்கு உதவியாக 4 ஹெலிகொப்டர்கள் கடும் தாக்குதலை மேற்கொண்ட போதிலும் விடுதலைப்புலிகள் கடும் எதிர்த்தாக்குதலை தொடுத்தனர்.

சுமார் 15 நிமிடங்கள்வரை நடைபெற்ற மோதலின் போது பல இராணுவத்தினர் விடுதலைப்புலிகள் வைத்த மிதிவெடியில் சிக்கியுள்ளனர்.

தாக்குதல் நடைபெற்ற வேளையில் இரு ஹெலிகள் தரையிறங்கிச் சென்றதாகவும் இருதரப்பினரிடையேயும் யுத்தம் முடிந்த பின்னரும் கடுவானை பகுதி முகாமிலிருந்தும், மகிழிபிரிட்ஜ் இராணுவ முகாமிலிருந்தும் கடுவானை காட்டுத்திசையை நோக்கி பலவலாக ஷெல்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. [வி-க]

மன்னாரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மிதிவெடிகளை சில இடங்களில் புதைத்து விட்டு சென்றுள்ளது இடம்பெயர்ந்த அகதிகள்தங்கள் இடங்களுக்கு செல்லும் போது இந்த மிதிவெடியில் ஒரு சிலர் அகப்பட்டு வருகின்றனர். இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைக்கு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வழங்குவதை பிரிட்டிஷ் அரசு உடனடியாக நிறுத்த வேண்டுமென முக்கியமாக குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் கடந்த ஜனவரியில் விடுதலைப்புலிகள் அறிவித்த யுத்த நிறுத்த முயற்சியை இவர்கள் பாராட்டியுள்ளதுடன் பிரச்சனையைத் தீர்க்க இருதரப்பும் மனமுவந்து பேச்சுக்களை நடாத்தவேண்டுமென்றும் கோரியுள்ளனர். (சி)

விமானத்தாக்குதல்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தாக்குதலால் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டும், பலகோடிரூபா பெறுமதியான சொத்துக்களும் உடைமைகளும் சேதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா இவ்விவகாரத்தில் தலையிட்டு இத்தாக்குதல்களை நிறுத்த இலங்கை அரசை வற்புறுத்த வேண்டுமெனவும் அம்மகஜரில் கோரப்பட்டுள்ளது. [கி]

ஓமந்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பற்றப்பட்டன:

நேற்றுக் காலை 10 மணியளவில் ஓமந்தை பகுதியிலுள்ள கோழிக்குளம் என்னுமிடத்தில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரைத் தேடிச் சென்று விடுதலைப்புலிகள் சுற்றிவளைத்து அதிரடித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் இராணுவத்தினருக்கு உதவியாக இரு பொம்மர்கள், இரு ஹெலிகள், இரு அவ்ரோ விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்கிய போதும், புலிகளின் அதிரடித் தாக்குதலில் 20 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், பலர் படுகாயமடைந்துள்ளனர். இம்மோதலில் புலிகள் 16 இராணுவத்தினரின் சடலங்களைக் கைப்பற்றினர்.

காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மேற்படி மோதல் நடைபெற்றது.

இம்மோதலில் விடுதலைப் புலிகளின் தரப்பில் 2வது லெப்டினட் வினிஷ்டன் (மன்னார்) வீரமரணம் அடைந்தார்

இதேவேளை இப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பிற்பகல் 2-00 மணி முதல் மாலை 6-30 மணி வரை மீண்டும் நடைபெற்ற மோதலில், பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், இரு இராணுவத்தினரின் சடலங்களையும், புலிகள் கைப்பற்றியதுடன் பல ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

இரண்டாவது தடவையாக நடைபெற்ற மோதலில் இராணுவத்தினருக்கு உதவியாக 2-பொம்மர்கள், 2- அவ்ரோ, 2 ஹெலிகள் அகோர வான் தாக்குதல் மேற்கொண்டன. [வி]

மூவருக்கு மரண தண்டனை

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் சமூகவிரோத செயல்களில் ஈடுபட்ட இருவருக்கு கடந்த 1ம் திகதி தமிழீழவிடுதலைப் புலிகள் மரண தண்டனை வழங்கியுள்ளனர்.

கோணலிங்கம் சுசிகலா [18 வயது- பட்டித்திடல்], அந்தோனி கந்தசாமி [வயது 40- 55ம் கட்டை] ஆகியோர்க்கும், யாழ். மாவட்டத்தை சேர்ந்த விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பருத்தித்துறையைச் சேர்ந்த வாசு [வேலாயுதம்-விஜயகுமார்] ஆகிய மூவருக்கும் மரணதண்டனை வழங்கப்பட்டது.

வாசு என்பவருக்கு ஊழல் மற்றும் பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்காக விடுதலைப்புலிகளால் மரணதண்டனை வழங்கப்பட்டது (வி-க)

நால்வர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நேற்று இரவு யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் மூதாட்டி உட்பட நால்வர் படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தோர் விபரம் வருமாறு:

திருமதி வி. பராசக்தி (80 வயது) முதலாம் வட்டாரம், அல்லைப்பிட்டி, சண்முகலிங்கம் மலைவாணன் (15 வயது), செல்வி சசிகலா சண்முகம் (20 வயது) வேலணை மேற்கு, சிவலிங்கம் இரகுநாதன் (20 வயது) அன்னுங்கை, கோண்டாவில் வடக்கு. (56)

மீட்கப்பட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

பி எம் ஜி லிங்-366, பரல்-1, எப். என். ஸி. மகஸின்-53, 60 எம். எம். ஷெல்-10, 5 56 ரவை-1,600, தொலைத்தொடர்புச் சாதனம்-2, தொலைபேசிக் கருவி-2, 40 எம் ஷெல்-6, நேட்டோ ரவைகள்-366, கைக்குண்டு-4, குண்டு துளைக்காத கவசம்-2. (வி)

அறத்தமிழ் காவலர்

[பருத்தித்துறை]

பருத்தித்துறை வியாபாரி மூலை விநாயக தருமநிதிய ஸ்தாபகர் திரு ஆ. சி. முருகுப்பிள்ளைக்கு யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராசாவினால் பட்டம் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டுள்ளது

மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளையின் 84 வது ஆண்டு நினைவுவிழா விலேயே இவருக்கு 'அறத்தமிழ் காவலர்' என்னும் பட்டம் வழங்கப்பட்டது (52)

கூட்டுறவுத்துறை ஊழியரின் சம்பளம் அதிகரிக்கப்படும்

(கொழும்பு)

- ஜனாதிபதி

கூட்டுறவுத்துறையில் கடமையாற்றும் சகல ஊழியர்களுக்கும் மாதாந்தம் 300 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படவிருக்கிறது. இச்சம்பள அதிகரிப்பு மே மாதம் முதல் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற கூட்டுறவுத்துறை ஊழியர்களின் கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கூட்டுறவுத்துறை ஊழியர் மாதாந்தம் 2,000 ரூபா சம்பளம் பெறும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படும். கூட்டுறவுத்துறையினர் தாய்புறுதி செய்யும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், கூட்டுறவுத்துறை ஊழியர்களின் சேமலாப நிதி ஓய்வூதியமாக மாற்ற நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும். இது சம்பந்தமான பணிப்புரை கூட்டுறவு அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது என்றார். (க)

உணவு மருந்துகளுடன் அன்னை திரேசா டாக்கா வந்தார்

(டாக்கா)

பங்களாதேஷில் புயலினாலும், வெள்ளத்தினாலும்பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருட்களும், மருந்துகளும் ஏற்றிக்கொண்டு அன்னை திரேசா நேற்று டாக்கா வந்தடைந்தார்.

டாக்கா விமானநிலையத்தை வந்தடைந்தது, பங்களாதேஷ் துயரச்செய்தி கேட்டு தான் பிரார்த்தனைகளில் ஈடுபட்டதாக செய்தியாளர்களிடம் அன்னை திரேசா கூறினார். (பூ)

சாவகச்சேரி - யாழ்ப்பாணம்

மினிபஸ் சேவை

தினமும் காலை 7.15 மணிக்கு சாவகச்சேரி டஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டு கச்சேரி ஊடாக யாழ்ப்பாணம் சென்று ஆஸ்பத்திரிக்கு முன்பாக தரித்து நின்று பிற்பகல் 3.00 மணிக்கு சாவகச்சேரியை நோக்கிப் புறப்படும் என்பதை பேபி டஸ்சேவை மகிழ்ச்சியுடன் பொதுமக்களுக்கு அறிவிக்கின்றது.

மெ. அற்புதராசா
தபால்நிலைய வீதி,
சாவகச்சேரி.

[எ 1275]

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம் என்கோகில் மேற்கு வீதி 66ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு மே மாதம் 6ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
Registered as a News Paper at the General Post office Lankanander License number B/1993305/31.